III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE.
O.S.02/2012

Deposition of witness for the Defendant/DW2
solemnly by Thiru.M.Muthupandi, Junior Assistant,
in accordance with the provision of Act I for 1873 on 16-03-2026

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : பிலால் அகமது | | Village | : |
| Father's / Husband's Name | : இக்பால் | | Calling | : |
| Age | : | | Taluk | : |

**<u>4 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

(சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு 4 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.)

என்னிடம் காட்டப்படுகின்ற பி.த.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையில் என்னுடைய பெயர் 2 வது எதிரியாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2 ஆம் பிரதிவாதி கொடுத்த புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டது தான் இந்த முதல் தகவல் அறிக்கை. அந்த புகாரில் 2 ஆம் பிரதிவாதியான ஜான்வெஸ்லி மற்றும் கிரிஸ்டிபெல்லுக்கு சொந்தமான 2 கோடியே 13 லட்சத்து 10 ஆயிரம் பெருமானமுள்ள சொத்தினை எதிரிகள் ஏமாற்றி பத்திரப் பதிவு செய்துவிட்டதாக கூறப்பட்டுள்ளது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2013 ல் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் பேரில் நடத்தப்பட்ட புலனாய்வில் 2023 ல் தான் போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள் என்று சொன்னால் சரிதான். இடைபட்ட 10 வருட காலத்தில் போலிசார் என்னை விசாரித்து எந்த வாக்குமூலமும் பதிவு செய்யவில்லை என்றால் புகார் கொடுக்கப்பட்ட 2013 ஆம் ஆண்டு வாக்கிலேயே விசாரித்தார்கள். அப்பொழுது வாக்குமூலம் பதிவு செய்தார்களா என்ற விவரம் எனக்கு தெரியவில்லை. தாவா சொத்தில் இன்றைய தேதி வரை அரசாங்கம் ஒரு சதுரடி நிலத்தை கூட கையகப்படுத்தவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 10.02.2011 அன்று 4 ஆம் பிரதிவாதியுடன் ஒரு

கிரைய ஒப்பந்தம் மேற்கொண்டேன் என்றால் அது துரைராஜ் 08.04.2011 அன்று ஏற்படுத்திக்கொண்டது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் 10.02.2011 அன்று 4 ஆம் பிரதிவாதியுடன் செய்துகொண்ட கிரைய ஒப்பந்தத்தை 08.04.2011 அன்று தான் செய்து கொண்டதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லியிருக்கிறேன், மிரட்டி எழுதி வாங்கியதாக சொல்லியிருக்கின்றேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் இந்த தகவலை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. 10.02.2011 அன்று 4 ஆம் பிரதிவாதியுடன் நான் ஒரு கிரைய ஒப்பந்தத்தை ஏற்படுத்திவிட்டு அதன்பிறகு 02.03.2011 அன்று வாதியோடு ஒரு பதிவு செய்யப்பட்ட கிரைய ஒப்பந்தத்தையும் ஏற்படுத்தி 4 ஆம் பிரதிவாதியை ஏமாற்றி தாவா சொத்தினை அபகரிக்க வேண்டும் என்பதற்காக வாதியோடு சேர்ந்துகொண்டு தற்பொழுது பொய் தகவல்களை நீதிமன்றத்தில் சாட்சியமாக கூறுகின்றேன் என்றால் சரியல்ல. தாவாசொத்து 4 ஆம் பிரதிவாதியின் வீட்டினை ஒட்டி மேற்கு புறமாக அமைந்திருக்கின்றது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது ஜான்வெஸ்லி பிலால் அகமதான எனக்கு சொத்தினை நிர்வாகம் செய்ய கொடுத்த ஆவணம் என்றால் இந்த ஆவணத்தில் உள்ள சரத்துக்களை நான் தான் எழுதினேன் ஆனால் அதில் என்னுடைய கையொப்பம் எதுவும் இல்லை. இந்த ஆவணம் ஆகஸ்ட் 2010 ல் தயார் செய்யப்பட்டது என்றால் 08.04.2011 க்கு பிறகு தான் இந்த ஆவணத்தை ஏற்படுத்தினார்கள். இது பற்றி என்னுடைய நிரூபண வாக்குமூலத்திலேயோ, வழக்குரையிலேயோ சொல்லவில்லை என்றால் எனக்கு அது ஞாபகம் இல்லை. நான் ஆகஸ்ட் மாதம் 2010 லேயே இந்த ஆவணங்களை எல்லாம் 4 ஆம் பிரதிவாதியிடம் கொடுத்து ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தி அதன்பின்னிட்டு 10.02.2011 ல் கிரைய ஒப்பந்த பத்திரம் ஏற்படுத்தினேன் என்றால் அதனை நான் மறுக்கிறேன். நான் தற்பொழுது 4 ஆம் பிரதிவாதியை ஏமாற்றவேண்டும் என்பதற்காக வாதிக்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதியை எனக்கு 2011 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திலிருந்து தெரியும்.

அதன்பின்னிட்டுதான் எனக்கும் வாதிக்கும் பண பரிவர்த்தனை ஏற்பட்டது என்றால் சரிதான். வாதியிடம் நான் வாங்கிய 4 ½ லட்ச ரூபாய் பணத்தை அவருக்கு திரும்ப கொடுக்காமல் இருப்பதற்காக தான் பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் ஏற்கப்படகூடியது அல்ல என்றால் சரியல்ல.

(5 வது பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகின்றது)